www.Padasalai.Net www.CBSEtips.in



# XI STD HSE SUPPLYMENTRY EXAMINATION, SEPTEMBER – 2020

## POLITICAL SCIENCE (KEY ANSWER) TAMIL VERSION 90 MARKS

## பகுதி - I

20 X 1 = 20

I சரியாண விடையை தேர்ந்தெடுத்தல்.-

1 இ. அரிஸ்டாட்டில்
2 அ. பகுதி IV
3 அ. ஜான் ஆஸ்டின்
4 அ. பி. ஆர். அம்பேத்கர்
5 ஆ. சமதர்மம்
6 அ. 1951
7 ஆ. குடியரசு தலைவர் முறையிலானது
8 இ. (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
9 இ. பிளாட்டோ
10 இ. ரூஸோ
11 இ. சமூக நலன்
12 இ. இங்கிலாந்து
13 ஈ. தொண்டர்கள்
14 அ. 61
15 அ. இந்திய குடியரசுத் தலைவர்
16 ஆ. 1882
17 இ. மத்திய அரசாங்கம்
18 அ. உயர்த்துதல்
19 ஆ. சர். தியாகராயர்
20 இ. திருநெல்வேலி

## பகுதி - II

7 X 2 = 14

21. மகிழ்ச்சி என்பது பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துக்களை எழுதுக.

மகிழ்ச்சி என்பது வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒரு மனிதன் தற்காலிக இன்பத்தை தேடுவதில் நேரத்தை செலவிடுவதைக் காட்டிலும் நிரந்தரமான மகிழ்ச்சியை தேடுவதே சிறந்தது என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும்.

22. இறையாண்மையின் பண்புகளை குறிப்பிடுக.

இறையாண்மையின் பண்புகள்:-

1 நிரந்தரமானது (Permanence)
2 பிரத்தியோகமானது (Exclusiveness)
3 அனைத்தையும் முழுமையாக உள்ளடக்கியது (All comprehensiveness)
4 மாற்றித்தர இயலாதது (Inalienability)
5 ஒற்றுமை மற்றும் எக்காலத்திலும் நீடித்திருக்கும் தன்மை (Unity and Everlasting)
6 பிரிக்கமுடியாதது (Indivisibility)
7 முழுமைத்தன்மை (Absoluteness)

23. பெண்ணியவாதிகள் பற்றி குறிப்பு வரைக.

பெண்ணியவாதிகள்:-

பாலின சமத்துவமே இக்கொள்கைவாதிகளின் குறிக்கோள் ஆகும். ஆண்களுக்கு சமமாக பெண்களும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் பெறுவதோடு மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார நிலைகளிலும் சம அதிகாரம் பெறுவதை இவர்கள் ஆதரிக்கின்றனர்.

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

24 இயற்கை சட்டம் என்றால் என்ன?

அரிஸ்டாட்டில் "சட்டம் செயல்படாத நிலையில் மனிதர்கள் விலங்குகளாக மாறுகிறார்கள்" என்று சரியாக சுட்டிக்காட்டுகிறார். சமுதாயத்தின் கட்டுக்கோப்பினைப் பாதுகாக்கவும் தேசத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும் சட்டமானது உலகம் முழுமைக்கும் இன்றியமையாதது.

25 கூடிவாழும் விலங்குகளின் எந்த பண்பியல்புகளைப பற்றி தாமஸ் அக்வினாஸ் எழுதினார்?

இவர் அரசு இயற்கையானது ஏனெனில் அது மனிதனுக்கும் இயற்கையானது. ஓர் சமூக மற்றும் அரசியல் விலங்காக ஓர் குழுவாக வாழ்வதற்கு' என வாதிடுகிறார். இதன் விளைவாக அரசியல் செயல்பாடுகள் தேவை மற்றும் நன்மையானதாகும் என் வலியுறுத்துகிறர்.

26 தாமஸ் ஹாப்சின் முக்கிய படைப்புகள் பற்றி எழுதுக

இவரின் படைப்புகள் (1). டி சைவ் மற்றும் (De Cive)

(2) லெவியாதான் ஆகியவையாகும். (Levlyathan)

27. கொள்கை அரசுக் கருவிகள் என்பதை விளக்குக.

பணக்காரர்களும் அரசாங்கத்தின் அதிகாரிகளும் ஒரே வர்க்கத்தில் இருந்து தோன்றுகிறார்கள் அரசு அதிகாரிகள் பணக்காரகளின் சொந்தகாரர்களாக உள்ளனர். இந்த தனிப்பட் உறவினால் அரசு பணக்காரர்களுக்கு சாதகமாக செயல்படுகிறது. பணக்காரர்கள் ஏழைகளை சுரண்டுவதற்கும் மேலாதிக்கம் செய்வதற்கும் அரசானது துணை போகிறது என்று ரால்ஃப் மிலிபன்ட் கூறினார்.

28. சமத்துவம் என்றால் என்ன ?

சமத்துவ கொள்கையானது, மனிதர்களை, நிறம், பாலினம், இனம்,தேசம் போன்றவைகளில் பாகுபாடு காட்டாமல் சமமான மதிப்புடன் நடத்தும் அரசியல் லட்சியமாக சம்த்துவம் விலங்குகிறது.

29. பெண்களின் முன்னேற்றம் பற்றி பரதியாரின் கருத்துக்களை எழுதுக.

பாரதியார் பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் ஆற்றலாதல் ஆகியவற்றை மிகவும் நம்பினார். இவர் குழந்தை திருமனம், வரதட்சணை முறையைத் தீவிரமாக எதிர்த்தார். ஆனால் விதவை திருமணத்தை அவர் ஆதரித்தார்.

30. சுய மரியாதை இயக்கத்தின் நோக்கங்கள் யாவை ?

சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட அனைத்து சாதியினரும் தங்களுக்கென்று சுயமரியாதையுடனும், உரிமைகளுடனும் வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட இயக்கம் ஆகும்

பகுதி - III 7 X 3 = 21

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

31. அரசு மற்றும் அரசாங்கத்திற்கு இடையேயான வேறுபாடுகள் யாவை ?

| வ.எண் | அரசு | அரசாங்கம் |
|---|---|---|
| 1 | அரசு என்பது மக்கள் தொகை, நிலப்பரப்பு அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு கூறுகளை கொண்டதாகும். | அரசாங்கம் என்பது அரசின் நான்கு கூறுகளில் ஒன்றாகும். |
| 2 | அரசு மூல அதிகாரங்களை பெற்றதாகும் | அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசிடமிருந்து பெற்றவையாகும் |
| 3 | அரசு என்பது நிரந்தரமானது என்பதுடன் என்றென்றைக்கும் நீடித்திருக்கும். | அரசாங்கம் என்பது தற்காலிகமானதாகும். மக்கள் விருப்பத்தின் பேரில் அரசாங்கங்கள் மாற்றப்படலாம் |
| 4 | அரசு என்பது காண முடியாததும், புலனாகதும் ஆகும். | அரசாங்கம் என்பது உறுதியனது மற்றும் காணக்கூடியது. |

32. பி. ஆர். அம்பேத்கரின் மக்களாட்சி குறித்த கருத்துக்களை எழுதுக.

வகுப்பு வாரிமுறை ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தமிழகத்தில் போராட்டங்கள் எழுந்தன. எனவே தந்தை பெரியார் உடனடியாக அரசமைப்புச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். தமிழகத்தில் காங்கிரஸ் தலைவராக இருந்த கு. காமராஜ், பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்திய அரசமைப்புச் சட்ட சிற்பி டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் ஆகியோர் முயற்சியால் வகுப்புவார் பிரதிநிதித்துவம் நீடிக்கும் வகையில் அரசமைப்புச் சட்த்தில் திருத்தப்பட்டது.

33. கொடுங்கோல் அரசாங்கம் என்றால் என்ன ?

ஒரு தனிமனிதனின் விருப்பு, வெறுப்பிற்கு உட்பட்டே ஆளுகை நடைபெறும். நிறுவப்பெற்ற மற்றும் நிலையான சட்டதிட்டங்கள் கிடையாது. மாண்டெஸ்க்யூவின் கூற்றுப்படி அரசு தொடர்ந்து நீடிப்பதற்கு "ஊறுதியான சமுதாயத்தினுடைய குறிப்பிட்ட உத்வேகத்தின் பண்பில் வடிவத்தை சார்ந்திருக்கிறது.

34. 'ஆழச் சூழலியல்' கருத்தைப் பற்றி எழுதுக ?

நார்வே நாட்டின் இயற்கைத் தத்துவ ஞானியான ஆர்ன் நேயஸ் 1973 ஆம் ஆண்டு இக்கருத்தை உருவாக்கினார். மகாத்மா காந்தி, ரஸேல் கார்ஸன் அகியோரிடமிருந்து இவர் ஊக்கம் பெற்றார். புவிக்கோள் மூன்று அங்கங்களைப் பெற்று இருகின்றது. அவைகள் (1) மனிதர்கள் (2) மற்ற உயிரினங்கள், (3) ஊயிரற்ற பொருட்களும் விசைகளும் ஆகும். பூமியில் வாழும் கோடிக்கணக்கான உயிர்களில் மனித இனமும் ஒன்று.

35. பொது கருத்தினை வரையறுக்கவும்.

பொதுக்கருத்து ஓர் உளவியல் மற்றும் சமூகத்தில் உள்ள அனைவரின் நம்பிக்கைக்கும், இசைவான தனிநபரின் நடத்தை சார்ந்த சமூக செயல்முறையாகும். சுருக்கமாக இது மக்களின் கூட்டு பார்வை அவர்களுடைய அணுகுமுறை மற்றும் கருத்துக்கள் ஆகும்.

36. இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் பற்றி எழுதுக.

1. வாக்காளர் பட்டியல் தயாரித்தல்
2. வாக்காளர் பட்டியலை திருத்துதல்
3. தொகுதிக்கான இடங்களை ஒருக்கீடு செய்தல்
4. தேர்தல் நடத்துதல்
5. தேர்தலை மேற்பார்வையிட்டு வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்.
6 அரசியல் கட்சிகளுக்கு அங்கிகாரம் அளித்தல்
7 கட்சிகளுக்கான சின்னங்களை ஒடுக்கீடு செய்தல்
8 சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்தல்

37. இங்கிலாந்தின் கட்சி முறை பற்றி விளக்குக.

இங்கிலாந்தில் முடியாட்சியின் நிலை மற்றும் அதன் பங்கினை பற்றிய பிரச்சனைகள் கருத்துக்கள் மையப்படுத்தப்படுவது இரண்டு கட்சிகளின் தோற்றத்திற்கு வழி வகுத்தது.

அவை:- 1 டோரீஸ் அல்லது பழமைவாதிகள்

2 விக்ஸ் அல்லது தாராளாவாதிகள்

38. நகர பகுதியை வரையறுக்கவும்.

மக்கள் தொகை 15,00௦௦- க்கு மேலும் மூன்று இலட்சத்திற்கு கீழும் உள்ள சிறு நகரப் பகுதிகளில் நகராட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதே போல் அதன் வரி வருவாய் அரசு நிர்ணயித்த அளவுக்குள் இருத்தல் வேண்டும். இதை அவ்வப்போது அந்தந்த மாநிலங்கள் தீர்மனிக்கும்.

39. இந்தியாவில் பாகுபாடு முறைகள் பற்றி விவரிக்கவும்.

பாகுபாடு என்பது ஒருவர் தாம் சார்ந்த குழுவின் உறிப்பினர் என்ற அடிப்படையை இல்லாமல் ஆக்குவது அல்லது இயற்கைமுல வளங்களை அணுகுவதில் இருந்து தடுப்பது. மேலும் இதில் செல்வம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு குழுவில் ஒருவரின் தகுதி அல்லது சுய - மரியாதையை உருவாக்குவதில் மறைமுகமான ஊக்கம் அவரது செல்வத்தால் ஏற்படுகிறது என்று பாகுபாடு எனும் புறகணிப்பு அல்லது ஒதுக்கள் குறித்து சமூக - உளவியலாளர்கள் மதிபிடுகிறார்கள்.

40. 1944 ஆம் ஆண்டு சேலம் மாநாட்டின் முக்கிய முடிவுகளை விவாதிக்கவும்.

1944 - ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டில், ஏற்கனவே பெரியாரின் தளபதியாகிவிட்ட திறமையான சொற்பொழிவாளரான சி. என். அண்ணாதுரை நீதிக் கட்சிய்ன் பெயரை திராவிடர் கழகம் (தி. க) என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டுவந்தார். பெரியார் "திராவிட நாடு" மானாட்டைக் கூட்டி திரவிடர்களுக்குத் தனி "திராவிட நாடு" கோரினார்.

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

## பகுதி - III

7 × 5 = 35

41 அ. அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல் பாடங்களுக்கும் உள்ள உறவு முறைகளை விவரிக்கவும்.

1. அரசியல் அறிவியல் மற்றும் வரலாறு (Political Science nd History)
2. அரசியல் அறிவியல் மற்றும் பொருளியல் (Political Science and Economics)
3. அரசியல் அறிவியல் மற்றும் அறிவியல் (Political Science and Ethics)
4. அரசியல் அறிவியல் மற்றும் சமூகவியல் (Political Science and sociology)
5. அரசியல் அறிவியல் மற்றும் உளவியல் (Political Science and Psychology)
6. அரசியல் அறிவியல் மற்றும் பொதுநிர்வகம் (Political Science and Public Administration)

அல்லது

ஆ. சமுதாயம் பற்றி திருவள்ளுவரின் கருத்துக்கள் குறித்து எழுதுக.

அரசியல் சிந்தனையாளர்களின் நடவடிக்கைகள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு ஆதரவாக மக்களின் ஈடுபாட்டினையும் பகுத்தறிவினையும் உருவாக்குகின்றன. சமகால அரசியல் களங்களில் அவர்கள் கலந்துரையாடல் மூலம் சமுதாயத்தில் தாக்கங்கள் உருவாகின்றன. அடுத்த காலகட்டத்திற்கு அறை கூவல் விடுக்கும் அரசியல் மாற்றத்துக்கான முடிவுகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். அவர்களது அரசியல் முடிவுகள் அநேக மக்களின் அன்றாட வாழ்வில் நீண்டகால மாற்றங்களை உருவாக்குகின்றன.

42. அ. 'மக்கள் நல அரசு' என்ற கருத்து பற்றி விவரிக்கவும்.

குடி மக்களின் நல்வாழ்விற்கான பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டினை பேணுதல் நல அரசின் பங்காகும் குடிமக்களின் பொருளாதார மற்றும் சமூக நலன் பின்வருவனவற்றின் அடிப்படை இல்லாத்தாகும். 1. வாய்ப்புகளில் சமத்துவம் எனும் கொள்கை 2. பொருளாதார வளங்களை சம்மாக வழங்குவதற்கான கொள்கை 3. குறந்தபட்ச நல்வாழ்க்கையை தங்களால் ஏற்படுத்திக் கொள்ள இயலாதவர்களுக்கு அவ்வாறான வாழ்க்கையினை ஏற்படுத்தி தருதல் ஆகும்.

அல்லது

ஆ. அரசின் பணிகள் மற்றும் வகைப்பாட்டினைப் பற்றிய அரிஸ்டாட்டிலின் விளக்கத்தினை மதிப்பிடுக

| பணிகள் | அரசுகளின் வகைப்பாடுகள் | | |
|---|---|---|---|
| அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அரசின் தலையாயப் பணி என்பது நல்வாழ்வினை ஊக்குவித்து மக்களின் மனநலம், ஒழு சூழ்நிலையை உருவாக்குவது ஆகும். அரசானது மக்களின் பழக்க வழக்கங்களை சிறந்த செயல்பாடுகளாக மாற்றி மேம்மடுத்துவதோடு, மகிழ்வு மற்றும் மதிப்பிற்குறியதாக வாழ்வினை மாற்றும் வகையில் செயல்பட வேண்டும். | அளவு | தரம் | |
| | வகை | சிறந்த வடிவம் | திரிந்த வடிவம் |
| | ஒன்று | முடியாட்சி | கொடுங்கோலாட்சி |
| | சிலர் | பிரபுக்களாட்சி | சிறுகுழு ஆட்சி |
| | பலர் | தூய ஆட்சி அமைப்பு | மக்களாட்சி |

43. அ. சுதந்திரத்தின் மீறலுக்கான காரணிகளை விளக்குக.

மனிதர்களின் வளர்ச்சிக்கும், அரசின் மேம்பாட்டிற்கும் சுதந்திரம் அதிமுக்கியமான அடிப்படி கூறாகும். முற்காலத்திலும், இடை காலத்திலும் இங்கிலாந்து முடியாட்சி மக்களுக்குத் தேவையான சுதந்திரத்தை ரத்து செய்தது வரலாற்று பதிவாகும். மக்களின் பொறுமையை சோதிக்க முழுமையான புரட்சியை சந்திக்க நேரிட்டது.

அல்லது

ஆ. இந்திய அரசமைப்பில் கூறப்பட்டுள்ள சமத்துவம் பற்றி கூறுக.

இந்திய அரசமைப்பின் உறுப்பு - 14 ன் படி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும் பிறப்பிடம், சாதி, மதம், மொழி, இனம், பாலினம், நிறம் போன்றவை அடிப்படயில் பாகுபாடு காட்டக்கூடாதுஎன்றும் தெரிவிக்கிறது. என்றும் இதைப் போல உறுப்பு - 15, உறுப்பு 14 ஐஉறுதிப்படுத்தும் நோக்குடன் இவ்வகை பாகுபாடுகளை தடை செய்துள்ளது சட்டத்தின் முன் சமம் மற்றும் சமமான சட்டப் பாதுகாப்பு ஆகியவை இந்திய அரசமைப்பு உறுப்பு 21 ன் மூலம் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் படி எந்த ஒரு நபரும் சட்ட நடை முறையன்றி அவரது வாழ்வு அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தினை இழக்க வைக்க முடியாது என்றும் விளக்குகிறது.

www.Padasalai.Net www.CBSEtips.in



44. அ. இந்திய குடியுரிமையினால் ஏற்படும் பல்வேறு விளைவுகளை கண்டறிக

இந்திய அரசமைப்பானது பாரபட்சமின்றி அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்குகிறது. குடியுரிமை பற்றிய சட்டங்கள், அரசமைப்பின் பகுதி இரண்டிலும் மற்றும் அவை தொடர்பான நாடாளுமன்ற சட்டங்களிலும் காணப்படுகிறது இந்தியாவில் குடியுரிமையானது பிறப்பு வம்சாவழி, பதிவு, இயல்புரிமை மற்றும் பிரதேச உள்ளடக்கத்தின் மூலம் பெறப்படுகிறது அரசமைப்பின்படி அரசாங்கம் குடிமக்களை இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் போன்ற நிலைகளில் வேற்றுமைப்படுத்தல் ஆகாது. மேலும் மதம் மற்றும் மொழி சார்ந்த சிறுபான்மையின மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகிறது.

அல்லது

ஆ. மாநில தேர்தல் ஆணையம் குறித்து கட்டுரை எழுதுக.

ஓர் மாநிலம் / ஒன்றிய பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி அம்மாநில / ஒன்றிய பிரதேசத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வயிடும் அதிகாரத்துடன் தேர்தல் ஆணயத்தின மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார். இந்திய தேர்தல் ஆணையமே ஓர் மாநிலம் / ஒன்றிய பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிக்கிறது அந்நியமனத்தின் போது மாநில / ஒன்றியப் பிரதேச அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல் ஆணையம் இறுதி முடிவெடுத்து செயல்படுகிறது.

45. அ அரசியல் தளத்தில் இந்திய மக்களாட்சியின் சாதனைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

சுதந்திர இந்தியாவின் முதல் பொது தேர்தல் 1951 ஆண்டு நடந்த போது களத்தில் 54 அரசியல் கட்சிகள் இருந்தனர். சமீபத்தில் நடந்து முடிந்த 2014 ஆம் ஆண்டு பொது தேர்தலின் போது அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 264 ஆக கூடி இருந்தது. இதிலிருந்து அரசியல் நடைமுறை விரிவாகவும் ஆழமாகவும் மாறி வருவது புலனாகிறது.

சுதந்திர இந்தியாவில் 1951 ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் 17.30 கோடி இந்திய மக்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றிருந்தனர். இவர்களில் 44.87 சதவிகிதத்தினரே வாக்களித்தனர். நாட்டின் 16 வது பொதுத் தேர்தல் 2014 ஆம் ஆண்டு நடந்த போது வாக்காளர்களின் எண்ணிக்கை 81.40 கோடியாக அதிகரித்திருந்தது. இதில் 66.4 சதவிகிதத்தினர் வாக்களித்தனர். இவர்களில் 67.9 சதவிகிதத்தினர் ஆண்கள் மற்றும் 65.6 சதவிகிதத்தினர் பெண்கள். இந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்ப்பாளர்களின் எண்ணிக்கையும் 8251 ஆக அதிகரித்துந்தது.

அல்லது

ஆ. இந்திய அரசமைப்பின் பகுதி XV எதலைவப் பற்றி கூறுகிறது.

பிரதிநிதித்துவம் என்பது பிறருக்காக பேசும் நடவடிக்கை அல்லது பிறருக்காக செயல்படுதல் அல்லது பிரதிநிதித்துவம் பெறும் நிலையாகும்.

இந்திய அரசமைப்பில் 'தேர்தல்கள்' என்னும் தலைப்பிலான பகுதி XV மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாகும். நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் இதில் உள்ள அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இதை அரசமைப்பின் ஓர் பகுதியாக இணைத்தனர். இம்முக்கிய காரணத்தினால் தான் 'தேர்தல்' என்னும் கருப்பொருளுக்கு நமது நாட்டில் அரசமைப்பிலான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

46. அ. நாடாளுமன்ற முறை அரசாகங்கத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை ?

| வ. எண் | குடியரசுத் தலைவர் முறை அரசாங்கம் | நாடாளுமன்ற முறை அரசாகங்க |
|---|---|---|
| 1 | குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார் | நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையக் கொண்ட அரசியல் கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாவார் |
| 2 | குடியரசுத்தலைவரே மேலான அதிகாரம் பெற்றவர் | மத்திய சட்டமன்றமே மேலா அதிகாரம் கொண்டதாகும். |
| 3 | அதிகாரப் பிரிவினை | அதிகாரப் பிரிவினை கிடையாது. அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருக்கும் |
| 4 | சுதந்திரமான கிளைகள் | ஒன்றுடன் ஒன்று கலந்த பணிகளை உடைய சுதந்திரமான கிளைகள் |
| | | |

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**46 (a) what are the differences between Parlimentary form of Government and Presidential form of Government ?**

**differences between Parlimentary form of Government and Presidential form of Government:-**

| S. NO | Presidential form of Government | Parlimentary form of Government |
|---|---|---|
| 1 | President is directly elected by the people | Prime minister is the leader of majority party |
| 2 | President is Supreme | Central Legislature is Supreme |
| 3 | Suparation of Powers | Absence of Separation Powers Centralization |
| 4 | Independent branches | Independent branches with Overlapping function |
| 5 | President – head of the State | President – head of the State |
| 6 | President – head of the Government | Prime Minister head of the Government |
| 7 | Separation of Powers | Centralization |
| 8 | Independent branches | Independent branches with Overlapping function |
| 9 | Individual Leadership | Collective leadership |
| 10 | President is not accountable to congress | Collective Individual Responsibility |

Or

(b) Evaluate the Party System in South Africa ?

Party System in South Africa:-

1. Universal adult suffrage vote 18
2. A national common voters roll
3. Regular election
4. A multi-party system of democrate government to ensure accountability, responsiveness and openness.

47 (a) Examine the main characterstics of the ideology of Mao.

characterstics of the ideology of Mao:-

Marxism belived that the State is an instrument of exploition of the workers by the capitalists workers and capitalist are always antagonistic towards each other. Mao modified this fundamental feature of Marxism. He propounded the concept of New Democracy. He created a new alliance in which the peasantry, the proletariat, the petty bourgeoisie and the national bourgeoisie become members. Subsequently, Mao declared the formation of a new kind of State called People's Democratic Dictatorship.

Or

(b) Critically evaluvate the chief characterstics of Anarchism

Anarchism does not champion the cause of disorder and disunity. On the contrary, it claims to emodody order and unity. Human beings are naturally provided with cooperatative instincts. They can lead a life of happiness and fulfilment guided by the instinct of voluntary cooperation. But the artificial institution of the State suppresses the cooperative instincts of man. It endagers freedom and rights of man. Anarchism aspires to destroy the State and implant in its place a new system of implant in its place a new system of voluntary associations. Every man will voluntarily and enthusiastically participate in public life. Anarchy does not mean a society without rules, rather without rulers.

S. KARTHIKEYAN
P. G. ASST
POLITICAL SCIENCE
Dr. RADHAKRISHNAN GOVT. BOYS HIGHER SECONDARY SCHOOL
TIRUTTANI - 631 209

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 5 | குடியரசுத் தலைவரே அரசின் தலைவர் ஆவா | குடியரசுத் தலைவரே அரசின் தலைவர் ஆவார் |
| 6 | குடியரசுத் தலைவரே அரசாங்கத்தின் தலைவர் ஆவார். | பிரதம மந்திரியே அரசாங்கத்தின் தலைவர் ஆவார் |
| 7 | குடியரசுத் தலைவரே தலமை பணியினை ஏற்கிறார் | கூட்டுத்தலைமை |
| 8 | குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்திற்கு (காங்கிரஸ்) புறுப்பானவர் கிடையாது. | நாடாளுமன்றத்தில் கூட்டுப் பொறுப்புணர்வு மற்றும தனிப்பொறுப்புணர்வு உண்டு |

அல்லது

ஆ. தென் ஆப்பிரிக்காவில் உள்ள கட்சி முறையை மதிப்பிடு செய்க.

18 வயதில் அனைவருக்கும் வாக்குரிமை

பொதுவான வாக்காளர் பட்டியல்

வழக்கமான தேர்தல்

பொறுப்புணர்வு, பதிலுரைத்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்கத்தை உறுதிப்படுத்த பல கட்சி முறை மக்களாட்சி அவசியமாகின்றது.

47. அ. மாவோவின் கொள்கையின் முக்கிய தன்மைகளை விவரிக்கவும்.

மாவோ புதிய மக்களாட்சி என்ற கொள்கையைக் கொண்டு வந்தார். அரசு ஏழைகளைச் சுரண்டும் பணக்கார்ரகளின் ஆயுதம் என்ற மார்க்ஸிய கருத்தை மாவோ சிறிது மாற்றியமைத்தார். விவசாயிகள், தொழிலாளிகள், சிறிய முதலாளிகள் தேசிய முதலாளிகள் என்ற நான்கு வர்க்கங்களுக்காக புதிய மக்களாட்சிக்கு மக்கள் மக்களாட்சி சர்வாதிகாரம் என்ற பெயரையும் அவர் சூட்டினார். இம்முறையில் தொழிலாளிக்கும், விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சிறிய முதலாளிகளும் அரசின் இளைய பங்குதாரர்களாகக் கருதப்பட்டனர். இந்த நான்கு வகை வர்க்கங்கள் அரசின் எதிரிகளாகக் கருதப்பட்டனர். அவர்களை 'ஏகாதிபத்தியத்தை இயக்கும் நாய்கள்' என்று மாவோ கடுமையாக வர்ணித்தார்.

அல்லது

ஆ. அதிகாரமில்லா கொள்கையின் முக்கிய தன்மைகளை மதிப்பிடுக.

பல்வேறு தத்துவ ஞானிகள் அமைப்பெதிவாதக் கொள்கையை விமர்சிக்கிறார்கள். மனிதனின் இயற்கை குணத்திற்கு எதிரானது. என்று கூறுகிறார்கள் அதனுடைய கருத்துக்கள் ஆழமற்றவை என்றும் விமர்சிக்கிறார்கள். மனிதனுடைய சுயநல குணத்தை அவர்கள் பார்க்கத் தவறிவிட்டார்கள். எல்லா ஒத்துழைப்புடன் இருக்கின்றனர் என்று கூற முடியாது. சந்தர்பங்களால் ஈர்க்கப்பட்டு சுயநலமாக அவர்கள் செயல்படலாம், அரசு இல்லா சமுதாயம் பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும் பயங்கரவாதம் வலைதளக் குற்றங்கள், சுற்றுசுழல் மாசுபாடு ஆகியவைகள் மனிதகுலத்தை வாட்டி வதைக்கக்கூடும். அரசு இல்லாவிட்டால் தீவிரவாத குழுக்கள் அணு ஆயுதங்களைக் கைப்பற்றி உலகத்தையே அழித்துவிடுவார்கள்.

S. KARTHIKEYAN
P. G. ASST
POLITICAL SCIENCE
Dr. RADHAKRISHNAN GOVT. BOYS HIGHER SECONDARY SCHOOL
TIRUTTANI - 631 209

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

பாடசாலை

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com